Crlmp No. 7530/2024 in CC.74/2019– PW–4–நடராஜன்
07.12.2024
Time 02.30 PM

எதிரி தரப்பில் அ.சா.4 யை திரும்ப அழைக்கக் கோரி மனு தாக்கல் செய்ததன் பேரில் திரும்பவும் இன்று அழைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நான் முதல் விசாரணையில் கூறிய விவரமான மேஸ்திரி எங்களை வேலைக்கு அழைத்துச் சென்றது குறித்து போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்தேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

2. 6 மாதங்கள் வேலை செய்த விபரத்தை போலீஸ் விசாரித்தபோது கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

3. ஒவ்வொரு குடும்பத்திலும் 3 நபர்கள் வீதம் வேலைக்கு சென்றோம் என்ற விபரத்தை போலீசார் விசாரித்தபோது கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

4. போலீஸ் விசாரணையில் சம்பளத்தில் 3ல் 2 பாகத்தை எடுத்துக் கொண்டு 3ல் 1 பாகத்தை எங்களுக்கு சம்பளமாக கொடுத்தார்கள் என்ற விபரத்தை கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

5. முதல் விசாரணையில் பாதிக்கு பாதி சம்பளத்தை பிடித்துக் கொள்வார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

6. ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்பணமாக ரூ.40,000/–கொடுத்ததாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

7. நள்ளிரவு 1 மணி முதல் வேலை செய்து வருவோம் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

8. எங்களுக்கும் எதிரிக்கும் சண்டை ஏற்பட்டதாகவும் அதன் பேரில் வட்டாட்சியர் நாங்கள் வேலை செய்த இடத்திற்கு வந்ததாகவும் முதல்

விசாரணையில் கூறிய விபரங்களை போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

9. வட்டாட்சியர் வந்தார். அவர் எங்கு பணிபுரிந்தார் என்று எனக்கு தெரியாது. வட்டாட்சியர் எங்களை விசாரித்தபோது நாங்கள் கூறிய விபரங்களை அவர் எழுதிக்கொண்டார். சேம்பரை எப்போது மூடினார்கள் என்று ஞாபகமில்லை. இந்த விபரங்களை நான் போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

10. சேம்பருக்கு 2012ம் ஆண்டு வேலைக்கு சென்றோம். எந்த மாதம் என்று ஞாபகமில்லை. 6 மாதங்கள் வேலை செய்தோம். வேலை செய்ததற்கு ஒப்பந்தம் போட்டோம். வாங்கிய பணத்திற்கு கையெழுத்து போட்டோம். வேலைக்கு சேருவதற்கு ஒப்பந்தம் போடவில்லை.

11. வேலைக்கு சேருவதற்கு ஒப்பந்தம் போட வேண்டும் என்று நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை. நாங்கள் பெற்றுக்கொண்ட பணத்திற்கு நாங்கள் வேலை செய்ததில் எங்களுக்கு எவ்வளவு பணம் கிடைக்க வேண்டும் என்றும் அதில் எவ்வளவு தொகையை முன்பணமாக பெற்றதற்கு கழித்துக் கொண்டார்கள் என்றும் குறித்து வைத்துக் கொள்வார்கள்.

12. எங்களிடம் அந்த பணத்திற்கு வரவு வைத்த நோட்டுப்புத்தகம் இருந்தது. அதனை போலீஸ் விசாரணையின் போது கொடுத்துள்ளோம்.

13. எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை வேலை பார்த்தோம். எத்தனை செங்கல் அறுத்தோம். எவ்வளவு வருமானம் கிடைத்தது. அதில் எவ்வளவு பிடித்துக் கொண்டார்கள். எவ்வளவு பணத்தை எங்களுக்கு கொடுத்தார்கள் என்ற விபரத்தை குறித்துக் கொள்வார்கள் என்றால் சரிதான். இரண்டிற்கும் ஒரே நோட்டைத்தான் பயன்படுத்தி வந்தார்கள்.

14. நாங்கள் வேலை பார்த்த இடத்திலும் மேற்படி விபரங்களை நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்வார்கள். இந்த விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேன்.

15. நாங்கள் தங்கி வேலைப் பார்த்தோம் என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்றால் எந்த ஆதாரமும் இல்லை.

16. நாங்கள் வேலை செய்து வந்த காலத்தில் ரேஷன் பொருட்கள்

வாங்கியுள்ளோமா என்றால் எங்கள் ஊருக்கு சென்று வாங்கி வருவோம். இந்த விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேன்.

17. வட்டாட்சியர் வந்து எங்களை மீட்டுச் செல்லும்போது வேன் ஒன்றை ஏற்பாடு செய்து எங்களை அழைத்துச் சென்றார்கள். எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் அந்த வேனில் அழைத்துச் சென்றார்கள்.

18. எங்களை மீட்டுச் சென்றதற்கு தாசில்தார் மீட்புச் சான்றிதழ் வழங்கினார். அது என் வீட்டில் உள்ளது.

19. எங்களை நேரடியாக காவல் நிலையம் அழைத்துச் சென்றார்கள். விசாரணை முடிந்த பின்பு போலீஸ் பாதுகாப்புடன் எங்களை திருச்சுழிக்கு அழைத்துச் சென்றார்கள்.

20. திருச்சுழியில் வைத்து தாசில்தார், RDO, விருதுநகர் தாசில்தார் அனைவரும் சேர்ந்து எங்களுக்கு சான்று வழங்கினார்கள்.

21. மீட்புச் சான்றை போலீஸ் விசாரணையில் கொடுக்கவில்லை. எங்களிடம் கேட்கவில்லை என்பதால் கொடுக்கவில்லை.

22. எங்களுக்கு மறுவாழ்விற்கு ஏதேனும் பணம் கொடுத்தார்களா என்றால் எங்களை திருச்சுழிக்கு அழைத்துச் சென்று மறுநாள் காலை 10.00 மணிக்கு தாசில்தார், RDO, விருதுநகர் தாசில்தார் வந்து ஆளுக்கு 1000 ரூபாய் கொடுத்து ஊரில் கொண்டு விட்டுவிட்டார்கள்.

23. District bonded labour rehabilitation fund கணக்கிலிருந்து ரூபாய் 20,000/- எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்களா என்றால் 10 நாட்கள் கழித்து ஆளுக்கு 5000 ரூபாய் கொடுத்தார்கள். இந்த விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை.

24. சேம்பரின் உரிமையாளர் யார் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரிதான் உரிமையாளர். அவர் உரிமையாளர் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை பார்வையிட்டுள்ளீர்களா என்றால் ஆவணங்களை எதையும் பார்க்கவில்லை. உரிமையாளர் சேம்பருக்கு வருவதை வைத்து தெரிந்து கொண்டோம். அதோடு நாங்கள் மூர்த்தியிடமிருந்து தான் பணம் பெற்றோம் என்பதால் அவர் தான் உரிமையாளர் என்று தெரிந்து கொண்டோம்.

25. மூர்த்தியிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டோம் என்பதற்கோ மூர்த்தி தான் எங்களை வேலைக்கு அமர்த்தினார் என்பதற்கோ எந்த ஆவணங்களும் இல்லை

என்றால் சரியல்ல. பணம் கொடுக்கும்போது ஒரு நோட்டில் எழுதி கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். அதை மூர்த்தியே வைத்துக் கொண்டார். அதை எங்களுக்கு கொடுக்கவில்லை. நாங்கள் வேலை செய்வதை பற்றி மட்டும் நாங்கள் வைத்திருந்த நோட்டில் எழுதிக் கொடுப்பார்கள்.

26. கல் அறுப்பதை கணக்குப் பிள்ளை எழுதிக் கொடுப்பார். மூர்த்தி அதில் கையெழுத்து எதுவும் போடமாட்டார். கணக்குப்பிள்ளை மூர்த்தியிடம் வேலை பார்த்தார் என்பதற்கு எந்த ஆவணங்களும் இல்லை.

27. சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல.

28. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.